# APOORVARAGAM

*Music & Dance Monthly Journal, Chennai - 600 028*

*ISSN 2395 - 2202*


Research Papers Presented in the International Conference on

# "Interaction between Music, Dance and Culture"

WITH COURAGE AND FAITH

*Organised by the*

**Department of Music**
**Faculty of Fine Arts**

90 Annamalai University
90th Anniversary Celebrations

## ANNAMALAI UNIVERSITY

**Annamalai Nagar, Chidambaram**



# தமிழிசை மரபின் தனித்தன்மை

சி . சூரியகுமார்,
இசைத் துறை முதுநிலை விரிவுரையாளர்,
யாழ்ப்பாணப் பலகலைக்கழகம்,
இலங்கை.

**முன்னுரை,**

இசை ஓர் உலகப் பொது மொழி என்பதனை யாராலும் மறுக்க முடியாது.மனிதன் நாடு, மொழி, இனம், பண்பாடு பேன்ற நிலைகளில் வேறுபாடு இருந்தாலும் உள்ளம் சார்ந்து ஒருமை நிலைக்கு கொண்டு வரக்கூடிய ஆற்றல் இசைக்கலைக்குண்டு. இது போன்ற பல சிறப்புக்கள் கொண்ட இசையின் கருவிகளில் தோன்றும் ஒலிகளில் மொழிகள் தெரிவதில்லை ஆயினும் குரல் வழி உருவாகும் வாய்ப்பாட்டிசையிலேயே மொழி அறியப்படுகின்றது. அவ்வாறான மொழி மூலமாகத்தான் ஓர் இன மக்களின் சிற்ப்பினை அறிந்து கொள்ளலாம். அத்துடன் தாய் மொழியில் இசைக்கின்ற இசையியனை கேட்கின்றபோது மனதில் ஏற்படும் இன்பம்ஓர் சுகமான அனுபவம் எனலாம்.அந்தவகையில் உலகில் பயன்பாட்டில் உள்ள இசை முறைகளில் முதன்மையானதும், பண்டையதுமாகத் திகழ்வது தமிழிசையாகும்.தமிழிசையின் தோற்றம் முதல் வடமொழித்தாக்கம் ஏற்படும் வரை தனித்தமிழில் ஒலித்த தமிழிசை பிற்காலத்தில் பெயர் மாற்றம் பெற்று அர்த்தம் தெரியாமல், மொழி புரியாமல் இசை அரங்குகளில் வேற்று மொழிப்பாடல்கள் ஒலிக்கின்றன. அந்தவகையில் தாய் மொழியின் பழமை, தமிழிசையின் தொன்மை, அதன் சிறப்பு போன்றவற்றினை தெளிவுபடுத்துவதற்கும், தாய் மொழியில் இசை பயில்வதாலும் பாடுவதாலும் உள்ளத்தில் ஏற்படும் ஆனந்தத்தினை இளைய சமுதாயத்திற்கு உணர்த்துவதை நோக்கமாகக் கொண்டும் மேற்கொள்ளப்படும் இவ்வாய்வானது வரலாற்று மற்றும் இலக்கிய அடிப்படையில் அமைகின்றமை குறிப்பிடத்தக்கது.

**தமிழிசை.**

இசை என்பதை விளக்கும் இசைத்தமிழ் இலக்கண, இலக்கியங்கள் இசைப்பது, சொல்வது, இசைவது, இணைவது, புகழ்வது பேன்ற முப்பதிற்கும் மேற்பட்ட பொருள்களில் குறிப்பிடப்படுகின்றன, சான்றாக:

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு (குறள் -அறத்துப்பால் - புகழ் 231)

இக்குறளில் வரும் இசை புகழைக்குறிப்பிடுகின்றது. ஆயினும் பொதுவாக இசை என்பதற்குஇசைய வைப்பது அல்லது இயைவது என்றும் பொருள்அந்தவகையில் இசையின் கூறுபாடுகாளகிய தொடரொலி, பண்,தாளம், பாடற்சொல், பாடற்பொருள், ஆடல் போன்றவை ஒன்றோடொன்று ஒன்றித்து இயைபுபட்டு இயங்குவது இசையாகும். இதனை

"யாழும் குழலும் சீரும் மிடறும் தாழ்குரல் தண்ணுமை
ஆடலொடு இவற்றின் இசைந்த பாடல் இசையாகும்" (சிலப் 3 : 26 - 28) எனும் சிலப்பதிகாரப்

பாடலிலிருந்து உணர்ந்து கொள்ளலாம்.உலகம் தோன்றி அதில் மனிதன் வாழ்வதற்கு முன்னரே இசை தோன்றிதை இயற்கையில் ஒலிகள் உள்ளதைக் கொண்டு அறியலாம்.அந்த ஒலிகளிலிருந்து கண்டுகொள்ளப்பட்டதே முதல் இசையாகும். அவ்வாறு ஒலிகளிலிருந்து இசையைக் கண்டு தொகுத்தவர்கள்''கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த குடி தமிழ்க்குடி'' என்ற நச்சினாக்கினியரின் கூற்றுப் போன்று உலகில் தோன்றியமுதல் மனிதர்களாகிய தமிழர்கள் என்றால் மிகையாகாது.இதனை தமிழின் தென்மையான தொல்காப்பியம் பேன்ற நூல்கள் குறிப்பிடுவது மட்டுமல்லாது அமெரிக்க நாட்டைச் சேர்ந்த தற்கால மொழியியல் ஆராய்ச்சியாளராகிய அலெக்ஸ்கொரியர் என்பவர் ஆய்வின் மூலமாக உலகில் தோன்றிய முதலாவது மொழி தமிழ் என்பதையும், தொன்று இன்றுவரை தொடர்ச்சியாக வழக்கிலிருக்கும் பயன்பாட்டு மொழியாக இருப்பதும் தமிழ் மொழி என்பதை நிறுவியுள்ளார்.புவியின் முதன்மைக் குடிகளாகியபண்டைத் தமிழர்களின் வாழ்வில் சிறப்பானதொரு இடத்தை இசை பெற்றிருந்தது. காடுகளில் உள்ள மூங்கில்களில் வண்டுகள் துளைத்த துளைகளில் காற்றுப் புகுந்து வெளிவருகின்ற போது ஏற்பட்ட இனிமையான இசை, மேலும் மூங்கில்கள் ஒன்றொடுடொன்று உரசும் பொழுது ஒலி எழுகின்ற காற்றானது தென்றலாக வீசும் போது ஓர் ஓசை, புயலாக அடிக்கும் போது ஓர் ஓசை, ஆகாயம் நீரை பொழியும் போது ஓர் ஓசை, இடி இடிக்கும் போது ஓர் ஒலி, அருவி விழும்போது ஓர் சத்தம் என்று இயற்கையிலிருந்து இயல்பாக எழுகின்ற ஒலியிலிருந்தே இசை பிறந்ததாகவும், இவற்றினை ஆதாரமாகக் கொண்டு தமிழுக்கு அழகாகிய ''ழ''கரத்ததை உடைய யாழ், குழல், முழவு ஆகிய இசைக்கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அக்கருவிகளின் இசையுடன் தமிழ் மொழியுடன் கூடிய குரல் சேர்ந்த போது அது தமிழிசையாக உருவாகியது என்பதைபண்டைய தமிழிசை இலக்கண, இலக்கிய நூல்கள்,பண்கள், இசைக்கருவிகள், இசைக்கலைஞர்கள், இசைப் பாடல்கள்,போன்ற பலவற்றின் குறிப்புக்களிலிருந்து அறியலாம். அத்துடன் தமிழ் மக்களால் கண்டறியப்பட்ட இசை என்பதால் அதற்கு தமிழிசை என்ற பெயரும் உருவாகியது. இன்று கர்நாடக சங்கீதம் என்ற பெயருடன் நிலவிவருவதும் இத்தமிழிசையே என்பது பல ஆய்வாளர்கள் மற்றும் இசையாளர்களின் கருத்துமாகும். அத்துடன் இசையின் தோற்றம் முதல் இன்றுவரை தொடர்ச்சியாக வளர்ந்துவரும் இசையும் இத்தமிழிசை என்பது பலரும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் உலக இசை முறைகளுக்கு தாயிசையாகவும் திகழ்வது இத் தமிழிசை என்பதும் ஆய்வாளகளின் கருத்தாகும். சான்றாக ''முல்லைத்தீம்பாணி'' எனும் பண் முல்லை நிலத்திற்குரிய பண்ணாகத் திகழ்ந்துள்ளது. இது தற்கால மோகன இராகமாகக் கருதப்படுகின்றது. இவ் இராகமானது தற்காலத்தில் உலகிலுள்ள அத்தனை இசை முறைகளிலும் பயன்படுத்தப்படுவதனைக் காணலாம்.

**வாழ்வடன் இணைந்த இசை.**

பண்டைத் தமிழர்கள் மிகப்பரந்த நிலப்பரப்பைக் கொண்ட தமிழகத்தை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகை நிலங்களாகப் பாகுபடுத்தி வாழ்ந்த அதே நேரம், வாழ்வியலின்பிறப்பில் தாலாட்டு முதல் இறப்பில் ஒப்பாரி வரைஎல்லா நிகழ்வுகளிலும் இசையை இணைத்துக்கொண்டு சிறப்பாக வாழ்ந்தனர். எப்போது தோன்றியது என்று அறுதியிட்டுக் கூறமுடியாத அளவிற்கு மிகவும் பழமை வாய்ந்த நாட்டாரிசையைத் தமிழர்கள்தாலாட்டுப்பாடல், கும்மிப்பாடல், கோலாட்டப்பாடல்,பிரார்த்தனைப்பாடல், விளையாட்டுப்பாடல்,சடங்குபாட்டு, நோன்புப்பாட்டு,நலுங்குப்பாட்டு,ஊஞ்சல்ப்பாட்டு,பழமொழிப்பாட்டு,ஒழுக்கப்பாட்டு,வேதாந்தப்பாட்டு,மீ

னவப்பாட்டு,ஏர்ப்பாட்டு,வண்டிக்காரன் பாட்டு,நாற்றுநடுகைப்பாட்டு,கப்பல் பாட்டு,ஒப்பாரிப்பாடல் என்பவை பேன்று பலவாறாகப் பாகுபடுத்தி வாழ்க்கையுடன் இணைத்துக் கொண்டனர். ஏனைய உலக இசை முறைகளிலிருந்து தமிழிசை தனித்துவமான சிறப்புப் பெற்று நிற்பதற்கு இதுவும் ஓர் காரணமாகும். சான்றாக நெய்தல் நிலம் என்பது கடலும் கடல்சார்ந்த நிலமுமாகும் இங்கு வாழ்கின்ற மக்களின் மனநிலையினை வெளிப்படுத்தும் இரங்கற் சுவையுடைய ஏராளமான பாடல்கள் அந்நிலத்தில் தோற்றம் பெற்றுள்ளன. இவ்வாறே ஒவ்வெரு நிலத்திற்குமுரிய பாடல்கள் அந்தந்த நிலங்களில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறையினை படம்பிடித்துக் காட்டுவனவாகத் தோற்றம் பெற்றுள்ளன.

## தமிழிசையே கர்நாடக சங்கீதம்.

தற்பொழுது இந்தியாவின் தென்குதியிலும்,ஈழத்தின் வடக்கு கிழக்கிலும், மேலும் உலகமெல்லாம் வாழ்கின்ற தமிழர்கள் பயன்படுத்துகின்ற தென்னிந்திய இசை முறைக்கு "கர்நாடக சங்கீதம்" என்ற பெயர் அமைந்துள்ளது. இப்பெயரைக் குறித்து கருத்து வேறுபாடுகள் இருப்பதால் சாம்பமூர்த்தி அவர்கள் இதை "தென்னிந்திய சங்கீதம்" என்றே குறிப்பிடுகின்றார். ஏனெனில் இவ்விசை தமிழ்நாட்டில் மட்டுமன்றி ஆந்திரம், கர்நாடகம், கேரளம் முதலில் மாநிலங்களிலும் இசைக்கப்பட்டு வருகின்றது.

கர்நாடக சங்கீதம் என்ற இசைமுறை கி.பி. 14ம் நூற்றாண்டில் வழக்கத்திற்கு வந்ததாக விஜயநகர சாம்ராஜ்யத்தை உருவாக்கிய வித்யாரண்யர் என்பவர் "சங்கீத சாரம்" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். "கர்நாடக சங்கீதம்" என்பதில் "கர்நாடகம்" என்ற பெயர் வந்ததற்கு பின்வரும் காரணங்களைக் குறிப்பிடலாம். 1) மிகப் பழமையான மரபு இசையைக் "கர்நாடகம்" என்பர். 2) பல நதிக்கரைகளைக் கொண்ட நாட்டின் இசையினை "கர்நாடகம்" என்பர். 3) பல தலைமுறைகளாக காதில் நீங்காமல் ஒலித்து வரும் இசை என்பதால் "கர்நாடகம்" என்று கூறுகின்றனர். 4) கறுப்பு மண் நிலப்பகுதியில் பாடப்படும் இசை ஆகையால் "கர்நாடகம்" என்கின்றனர். 5) திப்புசுல்தான் என்ற மன்னன் மைசூரைத் தலைநகரமாகக் கொண்டு தென்னிந்தியாவில் ஆட்சி புரிந்தான். அதனால் ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தில் சென்னை ராஜதானிப் பகுதியாக இருந்த பொழுது தென்னிந்தியாவுக்கு கர்நாடகப் பகுதி என்று பெயரிட்டு அழைத்தனர். என்பவை போன்ற காரணங்களினால் தென்னிந்திய இசைக்கு "கர்நாடக இசை" என்ற பெயர் ஏற்பட்டது என வரலாறு கூறுகின்றது. ஆயனும் பொதுவாக மிகவும் பழமையன இசை முறை என்பதால் இப்பெயர் ஏற்பட்டது என்று கொள்ளுதல் பொருந்தும். ஆயினும் தற்கால தென்னிந்திய இசையில் பயன்படுத்தப்படும் ஏராளமான கலைச் சொற்கள் தமிழிசைச் சொற்களேயாகும். சான்றாக இராகம் என்கின்ற சொல் தூய தமிழ்ச் சொல்லாகும். ஏனெனில் பண்டைத் தமிழிசையில் உள்ள தக்கராகம், பழந்தக்கராகம், நட்டராகம் போன்ற பல பண்களில் இராகம் என்கின்ற சொல் இணைந்துள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.

## தமிழிசைச் சிறப்பு.

தமிழிசையான இராகம், தாளம், பாடல் வகைகள், பாடல் சிறப்புக்கள், பாடுபொருள் என எல்லா வகைகளிலும் சிறப்புப் பெற்றது தமிழிசையாகும். உலகில் வேறு எந்த இசைமுறைக்கும் இல்லாத தனிச்சிறப்பு இதுவாகும். சான்றாக தற்கால இராகத்தினை எடுத்துக்கொண்டால்

எண்ணிலடங்காத இராகங்களைக் கொண்ட தென்னிந்திய இசையில் 72 தாய் இராகங்களும், பல்லாயிரக்கணக்கான சேய் இராகங்களும் நடைமுறையில் உள்ளன. இவற்றினை பண்டைக் காலத்திலிருந்து இன்று வரை வெவ்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டு வந்துள்ளதை அறிய முடிகின்றது. அந்த வகையில் பண்கள் என்றும், பெரும் பண்கள் என்றும், யாழ்கள் என்றும், பாலைகள் என்றும் பலவாறாக இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன். எது எவ்வாறு குறிப்பிடப்பட்டாலும் இவை அனைத்தும் ஒரு பொருள் குறிப்பனவேயாகும். முத்தமிழிற்கும் பொதுவான இலக்கணமாகத் திகழ்கின்ற தொல்காப்பியத்தில்

''தெய்வம் உணவே மாமரம் புள்பறை

செய்தியாழின் பகுதியெடு தொகைஇ

அவ்வகை பிறவும் கருவென மொழிப''(தொல்காப்பியம் பொருளதிகாரம் 20) எனும் இப்பாடலில் வரும் யாழ் என்பது பெரும் பண்ணையும், யாழின் பகுதி என்பது அப் பெரும் பண்ணிலிருந்து பிறக்கும் கிளைப் பண்களையும் குறிப்பதாகும். குறிஞ்சி முதலான ஐவகை நிலங்களுள் ஒவ்வொன்றிற்கும் சிறப்பியல்பான தொழிலிசையும் உண்டு. இன்ப இசையும் உண்டு என்பது புலனாகின்றது. இவ்வாறே ஏனையவையும் இவ்வாறு சிறப்புப் பெறுகின்றன.

**தமிழிசைப் பாகுபாடு.**

தற்காலத்தில் நடைமுறையில் உள்ள தமிழிசையினை 1) நாட்டுப்புற இசை 2) மெல்லிசை 3) செவ்விசை 4) திரையிசை என நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். இந்த பாகுபாடும் கூட உலகில் உள்ள பல இசை முறைகளில் காணப்படவில்லை என்றே கூறப்படுகின்றது. சான்றாக. நாட்டுப்புறப் பாடலுக்கு - மால மயங்குது மனசு தவிக்குது போன்ற பல பாடல்களையும், மெல்லிசைப் பாடலுக்கு - கார்திகை மாதம் மாலை அணிந்து போன்றபல பாடல்களையும்,செவ்விசைப் பாடலுக்கு - அறிவுடையோர் பணிந்தேத்தும் போன்ற பல பாடல்களையும்,திரையிசைப் பாடலுக்கு - சின்னக்கண்ணன் அழைக்கிறான் போன்ற பல பாடல்களையும் குறிப்பிடலாம்.

**முடிவுரை.**

தொன்று தொட்டு பல்லாயிரம் ஆண்டுகளாக தமிழ் மக்கள் வளர்த்துவந்த தமிழிசையை தொடர்ந்தும் வளர்க்கும் பாரிய கடமை இளைய சமுதாயத்திடமே இருக்கின்றது என்பதைக் கருத்தில் கொண்டு இசை பயிலும் மாணவர்கள் தமிழிசையை கற்கின்ற அதே சமயம் இசை பாடுபவர்கள் இசை அரங்குகளில் தமிழிசைப் பாடல்களைப் பாடுவதன் மூலமாக நமது தமிழிசை மரபு அழியாது பாதுகாக்க முடியும் என்பது நிதர்சனமாகும்.

1. கேசிகன் புலியூர் — திருக்குறள் புதிய படைப்பு
பூம்புகார் பதிப்பகம்.
சென்னை 600108
ஜனவரி 2005
2. அருணாசலம். மு — தமிழ் இசை இலக்கிய வரலாறு

கடவு பதிப்பகம்
மதுரை.
2009.

3. அங்கயற்கண்ணி. இ. — தமிழக இசையும் ஆய்வும்
மாணவர் மறுதோன்றி அச்சகம்
தஞ்சாவூர்
2002 பா

4. தனபாண்டியன். து.ஆ — இசைத்தமிழ் வரலாறு
வெளியீட்டு எண் 186
1994

5. தண்டபாணி. ப — திராவிடர் இசை
ஆபிரகாம் பண்டிதர் மன்றம்,
பதிப்பு - 2
2001